# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

| மலர்: 21 | ரௌத்ர வருஷம் - சித்திரை, வைகாசி<br>ஏப்ரல், மே - 1980 | இதழ் : 3, 4 |
|---|---|---|


## சவுபரீ சரிதம்

சக்ரவர்த்தியான மாந்தாதா அயோத்திமா நகரில் இருந்துகொண்டு, பூமண்டலம் முழுவதும் அரசாண்டு வந்தார். அவருக்கு இந்துமதி என்ற மனைவீ இருந்தாள். அவளிடத்தில் புருகுச்சன், அம்பரீஷன், நாபாகன் என்ற மூன்று புத்திரர்களையும், ஐம்பது பெண்களையும் பெற்றார். அக்காலத்தில் சவுபரீ என்ற மஹாமுனிவர் இருந்தார். அவர் ரிக்வேத மறிந்தவர். அவர் பன்னிரண்டு வருஷ காலம் தண்ணீரில் மூழ்கி தவம் செய்துவந்தார். இவருக்குச் சமீபத்திலேயே ஜலத்தில் ஒரு மிகப்பெரிய மீன் வசித்து வந்தது. அது தனது மனைவி மக்களுடன் இணைபிரியாமல் மஹரிஷியின் எதிரிலேயே கூடீகுலாவி இன்ப மனுபவித்து வந்தது. மஹரிஷி இவைகளை கவனித்தார். மஹரிஷியின் மனம் தவத்தில் செல்லவில்லை. அவர் மனசில் "இந்த மீன் நீர்வாழ் ஜந்துவாக இருந்தாலும் மிக பாக்யமுள்ளது. தன் குழந்தை குட்டிகளுடன் இணைபிரியாமல் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது. இல்லர சுகமே சுகம். நமது இந்த தபோ வாழ்க்கை மிக துக்ககரமானது" என்று எண்ணினார். விவாஹம் செய்துகொண்டு இல்லற சுகம் அனுபவிக்க விருப்பம்கொண்டார். ஜலத்தினின்று கரையேறி மான்தாதா அரசரிடம் சென்றார். ஆரசரும் முனிவரை வரவேற்று உபசரித்தார். ஷேம ஸமாஸாரங்களை விசாரித்தார்.

முனிவர் "அரசே! நான் விவாஹம் செய்துகொள்ள விரும்புகிறேன். உன்னிடமிருந்து நான் ஒரு கன்னிகையை யாசிக்கிறேன். உனக்கோ ஐம்பது பெண்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தியை எனக்கு தர வேண்டும்" என்று கூறினார். முனிவரின் வார்த்தையைக் கேட்ட அரசர் ஸ்தம்பித்துப்போய் விட்டார். தொண்டு கிழவரான முனிவரையும், அவருடைய ஆசையையும் கண்டு, ஒன்றும் தோன்றாதவராய் தலை குனிந்து யோசித்துக்கொண்டு இருந்தார். முனிவர், "என்ன யோசிக்கிறீர்? நான் என்ன சொல்லத்தகாததைத் சொல்லிவிட்டேனா?" என்றார். அரசர் தம் மனதில் இத் தொண்டு கிழவருக்கு என் மகளை எப்படிக் கொடுப்பது? மறுத்தாலோ சபித்து விடுவாரே என்று யோசித்து, "முனிவரே! எங்கள் குலத்தில், கன்னிகை விரும்பி வரிக்கும் வரனுக்கே விவாகம் செய்விப்பது வழக்கம். தாங்கள் எனது அந்தப்புரத்திற்கு எழுந்தருளுங்கள். அங்கே எனது ஐம்பது பெண்களும் இருக்கிறார்கள். அவர்களில் எவள் தங்களை விரும்புகிறாளோ, அவளையே தங்களுக்கு மணம் முடித்து வைக்கிறேன்" என்றார்.

அரசர் மனதில், முனிவரோ தொண்டு கிழவர். நமது பெண்கள் இவரை விரும்பமாட்டார்கள். பெண்கள் தன்னை மணக்க விரும்பவில்லை என்று தெரிந்தவுடன், முனிவர் பேசாமல் போய்விடுவார் என்று எண்ணினார்.

ஆனால், முனிவர் முற்றும் உணர்ந்தவரல்லவா! அரசருடைய எண்ணத்தை அறிந்து கொண்டார். முனிவர், "அரசே! உங்கள் குல வழக்கத்தை நான் மீறவில்லை. கன்னிகை என்னை காதலிப்பளாயின் நான் விவாகம் செய்து கொள்ளுகிறேன்; இல்லாவிட்டால், இம்முயர்சியையே விட்டு விடுகிறேன்" என்றார். அரசர் காவலாளியிடம் முனிவரை அந்தப்புரத்திற்கு அழைத்து செல்ல கட்டளை இட்டார். முனிவர் காவலாளியுடன் அந்தப்புரம் போகும்பொழுது, மிக அழகிய வாலிபமான உருவத்தை எடுத்துக்கொண்டார். காவலாளி முனிவரை அந்தப்புரத்தில் கொண்டு சேர்த்தான். மேலும் அப்பெண்களிடம் "சக்ரவர்த்தியான உங்கள் தகப்பனாரிடம், இம்முனிவர் விவாகம் செய்துக்கொள்ள பெண் வேண்டி வந்தார். இவரை யார் பிரியப்பட்டு வரிக்கிறார்களோ, அவர்களை இம்முனிவருக்கு விவாகம் செய்விப்பதாக உங்கள் பிதாவான அரசரின் கட்டளை" என்றான். அக்கன்னிகைகள், முனிவரின் அழகில் மோஹித்தவர்களாய் நான் நான் என்று ஐம்பது பெண்களும் அவரை மணக்கவிரும்பினார்கள். இவ்விஷயத்தை காவலாளி அரசருக்கு தெரிவித்தான். அரசரும் தனக்கு விருப்பமில்லாதிருந்தும், வாக்குத் தந்ததிற்கு பயந்து ஐம்பது கன்னிகைகளையும் சவுபரி மஹறிஷிக்குத் தானம் செய்துவிட்டார்.

முனிவர் மனைவீகளுடன் தமது ஆசிரமத்தை அடைந்தார். விச்வகர்மாவைக் கூப்பிட்டு ஐம்பது மாளிகைகளை, சுகபோகசாதனங்களுடன் கூடியதாக நிர்மாணம் செய்யும்படி கட்டளையிட்டார். அம்மாளிகைகளில் "நந்தனம்" என்ற

ஓர் நிதியானது நித்யமாக இருந்து கொண்டுவந்தது. முனிவரும் தம் யோகசக்தியினால் ஐம்பது உருவம் எடுத்துகொண்டு, ஐம்பது மனைவிகளிடமும் சுகம் அனுபவித்து வந்தார். இவ்விதம் அனேக வருஷங்கள் சென்றன. அநேக புத்திரர்களும், பேரன்களும் பிறந்தார்கள். குடும்பம் பெருகிக்கொண்டே போயிற்று. குடும்பம் பெருகப் பெருக ஆசையும் கவலையும் வளர்ந்து கொண்டே போயிற்று. மனம் குடும்பக் கவலையிலேயே மூழ்கிவிட்டது.

இப்படியிருக்க, ஒரு நாள் அவர் தமக்குள் யோசிக்கலானார். "ஆஹா! மாயையின் மகிமையை யாரால் அறியமுடியும்! ஆசையில் ஆழ்ந்து இருப்பவனுக்கு ஒருக்காலும் பரமார்த்தத்தில் பற்று உண்டாகாது. நான் ஜலத்தில் இருந்து கொண்டு வெகுகாலம் தபஸ் செய்திருந்தும் மனதை அடக்கமுடியவில்லையே! என்னோடு கூட இருந்த மீனின் ஸஹவாச தோஷத்தினாலன்றோ நான் என் தபோ பலத்தை இழந்தேன். மனிதனுக்கு ஒரு மனைவியை வைத்துக் காப்பாற்றுவதே துக்கத்திற்குக் காரணமாக இருக்க, நான் ஐம்பது மனைவிகளை மணந்தேன். அதற்குத் தக்க துக்கத்தையும் பெருக்கிக்கொண்டேன். இவை எல்லாம் என் தவத்திற்கு இடையூறாக முடிந்தன. அம்மீனின் சேர்க்கையன்றோ இவ்வளவு துக்கத்திற்கும் காரணம்" என்று மிக மனம் வருந்தினார். பிறகு தம் மனைவிகளுடன் விரக்தராகி வனம் சென்று தபஸ் செய்துகொண்டு இருந்தார். முடிவில் சகலவித பற்றுகளையும் துறந்து ஸன்யாசம் ஏற்று பரமபதம் அடைந்தார்.